**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 23** **நாள்: 13.02.2018**

**100 நகரங்கள் மீண்டெழல் அமைப்பின் பூர்வாங்க அறிக்கையினை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மீண்டெழல் அமைப்பின் தலைவர் திரு.மைக்கேல் பெர்கோவிட்ஸ் ஆகியோர் 100 நகரங்கள் மீண்டெழல் அமைப்பின் பூர்வாங்க அறிக்கையினை இன்று (13.02.2018) ரிப்பன் மாளிகையில் வெளியிட்டனர்.

அமெரிக்கா நாட்டில் தலைமையத்தை கொண்டுள்ள ராக்ஃபெல்லர் பவுண்டேஷன் என்ற சமூக தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் கீழ் இயங்கும் மீண்டெழும் 100 நகரங்கள் என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பானது மாநகரங்கள் சந்திக்கும் எந்த ஒரு இடர்பாடுகள் மற்றும் சரிவிலிருந்தும் மீண்டு இயல்பு நிலையை அடைவதற்கு உதவிபுரியும்.

பெருநகர சென்னை மாநகராட்சி எதிர்கொள்ளும் எந்த ஒரு இடர்பாடுகளிலிருந்தும் திறம்பட சமாளித்து இயல்பு நிலைக்கு விரைவில் மீண்டு எழ இந்த அமைப்பு உதவும். சென்னை மாநகர பொறியாளர்கள் இயற்கை பேரிடர்களை சமாளிப்பதற்கு தேவையான பயிற்சிகளை வெளிநாடுகளில் பெறுவதற்கும், மீண்டெழுவதற்குண்டான திட்டத்திற்கு நிதி ஆதாரம் பெறவும் இந்த அமைப்பு உதவும்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஒரு உறுப்பு நகரமாக சேர்க்கப்பட்டு அதற்குண்டான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இவ்வமைப்பு மேற்கொண்ட ஆய்வு மற்றும் பிற அமைப்புகளின் கருத்தறிதல் கூட்டம் நடைபெற்றது. இதன் பூர்வாங்க அறிக்கை இன்று வெளியிடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மேற்பார்வை பொறியாளர் (மழைநீர் வடிகால் துறை) திரு.எல்.நந்தகுமார் மற்றும் மீண்டெழல் அமைப்பின் முதன்மை அலுவலர் திரு.கிருஷ்ணமோகன் ராமச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**